


# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2019 மார்ச் வெளியீடு

நீர் எங்களை உருவாக்குகிறவர்,
நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.
ஏசாயா 64:8

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# என் வார்த்தைகள்

## வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை (மத்தேயு 24:35)

தேவனால் தெரிந்து கொள்ளப்படுவதென்றால் என்னவென்பதை நீ புரிந்து கொள்வதற்கு முன்பாக “உலகம்” என்ற வார்த்தையின் அர்த்தம் தெரிந்திருக்க வேண்டும். நீ இந்த பூமியில் பார்க்கிற யாவும் சீக்கிரமாக, மாயமாக மறைந்து போகும். நிலையானவை அல்லது அசைக்க முடியாதவையும் என்றென்றும் நிலைத்திருப்பதும் எதுவென்றால் “வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” என ஆண்டவரால் கூறப்பட்ட கூற்றேயாகும். ஆதலால் இவ்வுலகம் ஒருநாள் கடந்து போகும், ஒழிந்து போகும். சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் எல்லாமே மாறிப்போகும். இன்னும் சில மாறிப்-போகாதவைகளுண்டு. அவற்றில் “அசைவில்லாத ராஜ்யத்திற்கு (எபி 12:28) நம்மை கொண்டு வருவதற்காகக் கர்த்தர் நம்மை தெரிந்து கொண்டிருக்கிறார்.

நீ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் தெரிந்துகொள்ளப்பட்டவனென்றால், நீ அசையாத காரியங்களை எவ்வளவு பெற்றிருக்கிறாய். அல்லது அசைந்து அழிந்து போகக்கூடிய காரியங்கள் எவ்வளவு உண்டு. உன்னுடைய வங்கிக் கணக்கில் நீ எவ்வளவு சேமித்திருக்கிறாய்? அல்லது உன்னுடைய சொத்து எவ்வளவு இருக்கிறது என்பதல்ல, அல்லது ஒரு வேளை உனக்கு எவ்வளவு நிறைவான வேதாகம அறிவு இருக்கிறது என்பதும் அல்ல எவ்வளவுதான் வேதாகம அறிவைப் பெற்றிருந்தாலும் அது சீக்கிரத்தில் மறக்கப்பட்டுபோகும். நம்முடைய புண்ணிய கிரியைகளும் நீண்ட நாட்களுக்கு நிலைத்திரா: நாமும் எப்பொழுதும் நல்லவர்களாகவே இருக்கமாட்டோம். ஏனெனில், நம் சுபாவம் அடிக்கடி மாறுகிறதாயும், நாம் பலவீனங்கள் நிறைந்தவர்களாயும்? ஒழிந்து போகிற அற்ப அலுவல்களில் நேரத்தையும் கவனத்தையும் விரயமாக்குகிறவர்களாயும் வாழ்கிறோம்.

“தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்-களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே” (எபேசியர் 1:4)

கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் உணர ஆரம்பித்த உடன் நாம் வாழ்கின்ற இவ்வுலகம் எவ்வளவு மாயையானதாகவும், இதிலுள்ள ஒன்றும் நமக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொடுக்க இயலாதென்றும், அறிந்து கொள்கிறோம். இப்பூவில் உள்ளவைகளெல்லாம் மென்மேலும். நம்மை உளை-யான சேற்றுக்குள் ஆழ்த்துபவை தான் என்று அறிந்துகொள்கிறோம். இந்த-உலகத்திலிருந்து உங்களை நான் பிரித்தெடுத்தேன்” என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். இவ்வுலகின் ஆசாபாசங்களிலிருந்தும், அவற்றின் கவர்ச்சியிலிருந்தும் அவை நம்மை மோசம் போக்கிவிடாதபடிக்கும், நம்மை பிரித்துவிடாதபடிக்கும் நமக்கு நித்தியமான ஐசுவரியங்களைக் கொடுப்பதற்கா-கவும், அவர் நம்மைத் தேடி வந்தார். ஆதலால், அவரை நிராகரித்து விடாதீர்கள்!

- Bro. Bakth Singh -

# சுதந்திரம்

- Bro. Romesh Razaideen -

இலங்கை நாட்டினர் தங்களது சுதந்திரத்தைக் கொண்டாடிவிட்டனர். அநேகர் அறிந்த விடயம் பல ஆண்டு-களுக்கு முன்பதாகவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகியோர் எமது நாட்டை ஆக்கிரமித்து ஆட்சி செய்தனர். கடைசியாக கி:பி 1815 ஆம் ஆண்டளவில் பிரித்தானியர் நாட்டை கைப்பற்றி ஆட்சி புரிந்தனர். 1948ல் ஏற்பட்ட சுதந்திர போரட்டத்தில் இலங்கை நாட்டினருக்கு சுதந்திரம் அளித்துவிட்டு அவர்கள் தங்கள் நாட்டி-ற்கு திரும்பினர். அந்த நாளே நாட்டின் சுதந்திர நாளாக பிரகடனப்படுத்-தப்பட்டது. ஆனால், இன்றைய நாட்டின் நிலைமையை நாம் பார்க்கும்போது, பிரித்தானியரே எம்மை ஆண்டிருந்தால் நலமென்று தோன்றுகிறது.

எது எப்படியாயினும் விசுவாசிகளா-கிய எமக்கு கிடைத்த சுதந்திரத்தை குறித்து பேசாமல் இருக்க முடியாது. விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரு-டைய வாழ்விலும் நம் ஆண்டவர் விடுதலையை கொடுத்திருக்கிறார்.

யோவான் 8:31-36 “இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்-திருந்தால் மெய்யாகவே என் சீஷராய் இருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். அவர்கள் அவருக்குப் பிரதி-யுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததி-யாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்க-வில்லை. விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்-சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான். குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.”

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி கூறிய இதை நாமும் எமக்காக பிரயோகிக்கலாம். அன்று யூதர்கள் இயேசுவை விசுவாசித்-தார்கள். இன்று நாமும் இயேசுவை விசுவாசிக்கிறோம். உண்மையாகவே நாம் தேவனை தொழுதுகொள்கிற-வர்களாய் இருந்தால் சத்தியமாகிய தேவனுடைய வேதத்தை அறிந்திருக்க வேண்டும்.

தகுதியான ஆராதனைக்காக நாம் ஆயத்தப்படும் போது, இந்நடைமுறை வாழ்வில் நாம் தேவ வார்த்தையில் நிலைத்திருக்கிறோம் என்பது அவ்வளவு சாத்தியமில்லை. தேவனுடைய வார்-த்தைகள் எமது உள்ளத்தில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா? செய்கின்ற காரியங்கள், செயல்படுத்-தாத காரியங்கள் , தேவ வார்த்தையில் தடை செய்யப்பட்டுள்ள காரியங்கள் இவை எல்லாவற்றையும் சிந்தித்து எமது உள்ளத்தை பரிசீலித்துப் பார்க்கிறோமா? மற்றவர்கள் இவற்றை செய்கிறார்களே! சகஜம்தானே! என சாக்குபோக்கு சொல்கிறோமா?

ஆதி சீஷர்களின் நிலைப்பாடுகளை நாம் காணும்போது:

1. நான் உமக்காக உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன் என்ற தலைமை சீஷன் தூரத்-திலிருந்து வேலைக்காரிக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தான்.

14ம் பக்கம் பார்க்க...

# தேடல்கள் பலவிதம்

“உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார்” (லூக்கா.24:5-6)

உலகிலுள்ள அனைத்து மதப்பிரிவினர்களிலும் தத்தமது மதக்கோட்பாடுகளைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும் நோக்கமும் இறைத்தேடல் ஆகும். ஆனால் அந்தத் தேடல் சரியான வழியில் இருந்தால் மட்டுமே அவர்களால் ஒன்றான மெய் தேவனை அறிந்து கொள்ள முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனாகப் பூமியில் அவதரித்தபொழுது ஞானிகள் பலர் தேடி வந்து அவரை வணங்கி காணிக்கைகளை முன் வைத்தனர். இவ்வாறாக அவர் உலகில் வாழ்ந்த நாட்களில் பலரும் பல சந்தர்ப்பங்களில் அவரைத் தேடினார்கள். அத்தகைய தேடல்கள் சிலவற்றையும் அதற்கு இயேசுவானவரின் எதிர்வினை எப்படி இருந்தது என்பது பற்றியும் இப்போது தியானிப்பேம்.

**எதிர்வினை 1**

“நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்?” (லூக்கா 2:49). இயேசுவானவருக்குப் பன்னிரண்டு வயதாயிருக்கும் போது தனது பெற்றோருடன் பஸ்கா பண்டிகை கொண்டாடுவதற்காக வழக்கம் போலவே சென்றிருந்தனர். ஆனால் திரும்பி வருகையில் இயேசு எருசலேம் தேவாலயத்திலேயே தங்கி விட்டார். இதை அவருடைய பெற்றோர் அறியவில்லை. பெரும் கூட்டமாக அவர்கள் சென்று வந்ததால் பயணக்கூட்டத்தாரிடையே அவர் இருப்பார் என நினைத்திருந்தார்கள். மற்றவர்களிடத்தில் விசாரித்த போதும் அவர் இல்லாததால் அவரைத் தேடிக்கொண்டு மறுபடியும் எருசலேமுக்கு போய் மூன்று நாட்களுக்கு பின் அவரைத் தேவாலயத்திலே போதகர்களோடு உரையாடிக்கொண்டிருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு அவருடைய தாய் அவரைப்பார்த்து “மகனே, ஏன் எங்களுக்கு இப்படி செய்தாய்? இதோ உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே” என்று கேட்டதற்கு “நீங்கள் ஏன் என்னை தேடினிர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டும் என்று அறியீர்களா?” என்று இயேசு எதிர்வினை கூறினார். (லூக்கா 2:41-49). இந்த இடத்திலேயே மரியாளும் யோசேப்பும் தற்காலத்தில் வாழும் பெயர் கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக இருக்கின்றனர்.

இக்காலபெயர் கிறிஸ்தவர்களும் கூட இவ்வாறே தங்களோடு கிறிஸ்து இல்லாததை அறியாமல் அவரைத் தேடுகின்றனர்.குழந்தை இயேசு என்று சொல்லி சொரூபம் செய்து அதற்கென்று கோவில்களையும் கட்டி, வெள்ளிக் கிழமைகள் தோறும் யாத்திரை செய்கிறார்கள். இப்படியானவர்கள் கர்த்தருடைய நாளிலே “இதோ நாங்கள் உம்மை தேடினோமே” என்பார்கள். அப்பொழுது மரியாளுக்கு கூறியதைத்தான் ஆண்டவர் இவர்களுக்கு எதிர்வினையாகக் கூறுவார். ஏன் வீணாக சிலைகளிலும் சிற்பங்களிலும் கட்டடங்களிலும் என்னைத் தேடினீர்கள்? நான் உங்களுடைய பாவங்களுக்காக பாடுபட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்தெழுந்து நாற்பது நாள் வரைக்கும் உயிரோடிருப்பவராக அநேகருக்குத் தரிசனமாகி பின்பு சீஷர்கள் முன்னிலையில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிதாவானவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் நியமிக்கப்பட்ட ஓர் நாளில் மறுபடியும் பூமிக்கு வந்து இவ்வுலகை நியாயந்தீர்க்கவிருப்பதையும் நீங்கள் அறியீர்களா?

ஆம், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்போழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் (எபி. 7:25)

## எதிர்வினை 2

"என்னதேடுகிறீர்கள்?" (யோவான் 1:38) யோவான் ஸ்நானகனும் அவருடைய இரண்டு சீஷர்களும் நிற்கும் போது இயேசுவானவர் அவ்வழியே போகக்கண்டு "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் சொன்ன போது அந்த இரண்டு சீஷர்களும் இயேசுவுக்கு பின் சென்றார்கள். அவர்கள் தமக்குப் பின் செல்லுகிறதைக் கண்டு அவர்களைப் பார்த்து இயேசு "என்ன தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "போதகரே, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்க ஆன்டவர் "வந்து பாருங்கள்" என அவர்களை அழைத்துச் சென்றார். அவர்கள் அவரோடே தங்கினார்கள். (யோவா.1:35-39)

அன்பார்ந்தவர்களே, அந்த சீடர்கள் தமக்கு பின் செல்ல விரும்புவதை இயேசுவானவர் அறிந்திருந்த போதிலும் அதை அவர்கள் தாமாக தமது வார்த்தைகளினால் தேரியப்படுத்த வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. ஆம், தம்மை விசுவாசிக்கிறவர்கள் எப்பொழுதும் தம்முடன் ஐக்கியமாக இருப்பதையே இயேசுவானவர் எதிர்பார்க்கிறார்.

இந்த நாட்களிலே விசுவாசிகள் என்னப்படுவர்களில் சிலர் வனாந்தரக்கிறிஸ்தவராகவும் சிலர் வருடாந்த கிறிஸ்தவர்களாகவும் இன்னும் சிலர் பண்டிகைக் கால கிறிஸ்தவர்களாகவும் இருப்பது பரிதாபத்துக்குரியது. சிலர் ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் சபைக்கூட்டத்திற்கு போனால் போதும் என நினைக்கிறார்கள் சிலர் வருடத்திற்கு ஒருமுறை தான் சபை கூடுகைக்கு வருவார்கள்.

இவர்கள் தனிப்பட்ட முறையிலே கிறிஸ்துவோடு உறவு இல்லாமல் கடமைக்கு கிறிஸ்தவர்களாக வாழுகிறவர்கள்.

பிரியமானவர்களே, தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாய் இருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.(1கொரி.1:9)

## எதிர்வினை 3

"நீங்கள் அப்பம் புசித்து திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" (யோவான் 6:26).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு சிறு மீன்களையும் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு பகிர்ந்து கொடுத்த அற்புதத்திற்கு பின்னர் அனேக ஜனங்கள் அவரைத் தேடி வந்து, "ரபீ நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்" என கேட்டதற்கு இயேசு அவர்களுக்கு எதிர்வினையாக "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, அப்பம் புசித்ததினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" எனக் கூறுகிறார் (யோவான் 6:22-26).

ஆம், அந்த ஜனங்கள் இயேசுவானவர் யார் என்று அறிந்து கொண்டதினால் அவரைத் தேடவில்லை அவர்கள் கண்ட அற்புதத்தின் மூலம் அவரே சிருஷ்டிகர் என்று அறிந்திருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அப்பத்தினாலேயே திருப்தியடைந்தனர். இன்றும் கூட அனேக விசுவாசிகள் இதே நிலையில் இருக்கிறார்கள் அல்லவா! அவர்கள் இயேசுவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசிப்பதை விட உலகியல் ஆசீர்வாதங்களை எதிர்பார்த்தே அவரைத் தேடுகிறார்கள்.

வேதம் என்ன சொல்லுகிறது இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தால் நாம் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1கொரிந்தியர் 15:19). ஆகையால் அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள். (யோவான் 6:27)

- Bro. M. Gnanendren -

# ஆண்டவருடைய பார்வை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மனு அவதார நாட்களில், எச்சூழ்நிலை-களிலும் குற்றம் கண்டுபிடிக்கும் ஒரு சில குழுவினரோடு இடைபடுகிறார். அவர்கள் புகழ்ச்சியை விரும்புகிறவர்களும், தங்களை உயர்வாக கருதி, சராசரி மனிதர்களை இழிவாக கருதி, குறைத்து மதிப்பிடுகி-றவர்களுமாயிருந்தார்கள். உண்மையான தெய்வம் எங்களோடு நடமாடுகிறார் என்று அறியாத கற்ற அறிவிலிகளாயிருந்தார்கள். ஆண்டவர் அப்படிப்பட்டவர்ளை வன்மையாக கண்டிக்கிறதையும், சூட்சுமமான முறையில் அவர்களிடத்தில் பேசுவதையும் நாம் காண்கிறோம்.

லூக்கா 7: 37 - 50 ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீமோன் எனும் ஒரு பரிசேயன் வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கப்-பட்டிருந்தார். அங்கு ஒரு பெண் ஆண்டவரை வணங்க வந்திருந்தாள். அவளை கண்ட-திலிருந்து அந்தப்பரிசேயன் நிலைகொள்ள-வில்லை. அந்த தருணத்தில் ஆண்டவர் அவனுடைய குறைவான அன்பையும், அவளுடைய நிறைவான அன்பையும் எடுத்துக்காட்டுகிறார்.

அவள் ஆண்டவர் யார் என்பதை சரியாக அறிந்திருந்தாள் ஆனால், அந்த பரிசேயன்: அவன் அருகில் ஆண்டவர் இருந்தும் அவரை தொட முடியாதவனாய் காணப்படுகிறான்.

இஸ்ரவேலர் சமாரியரை தரக்குறைவாக கருதினர். யோவான் 4 ஆம் அதிகாரத்தில் ஆண்டவர் ஒரு சமாரியப் பெண்ணிடம் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தா என்று ஆரம்பித்தவர், எல்லாம் வல்ல ஜீவனுள்ள ஒரே தேவனை நாம் எப்படி வழிபடுவது என்பதை தெளிவுபடுத்தி, மிக மிக சிறப்பான மேன்மையான ஆவிக்குரிய சத்தியத்தை அவளுக்கே தெரியப்படுத்தினார்.

மத்தேயு 21: 31 - அவரிடம் கேள்வி கேட்பவர்களை பார்த்து "ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவ-னுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"

மத்தேயு 9:13 - நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

மத் 18:11 - மனுஷகுமாரன் கெட்டு போனதை ரட்சிக்க வந்தார்.

தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர். அவரே எழுந்துமி-ருக்கிறவர். அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. ரோமர் 8: 33, 34

இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆதலால், நாமும் சக விசுவாசிகளை ஏனைய மனிதர்களை மதித்து நடப்போம்!

- Sis. Tilaka -



# தேவனுடைய வார்த்தையின் செல்வாக்கினால் எங்களுக்குள்ளே உருவாகுகிற அபிவிருத்திகள்

1 தெச 2:13- நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவ வசனம் தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.

எபிரெயர் 4:12 - தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகை அறுக்கிறதாயும் இருக்கிறது.

தேவனுடைய வார்த்தைக்கு ஜீவன் (உயிர்) இருப்பதால் அது எமக்குள்ளே உயிரோட்டத்தை உருவாக்குகிறது. தேவ வார்த்தையில் நாம் வெற்றிபெரும் பத்து விடயங்களை உங்கள் முன் வைக்கிறேன். அதின் அடிப்படையில் தேவ வார்த்தை அப்படி செயற்படுகிறதாவென்று நீங்களே பரிசீலித்து பார்க்க வேண்டுகிறேன்.

### ஆவிக்குரிய ஜீவனை (உயிரோட்டம்) உருவாக்குகிறது. ஆரம்பம்.

யோவான் 3:3,5 - ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான், ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்

1 பேதுரு 1:23 - அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

யாக்கோபு 1:18 - தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். உங்கள் ஆரம்ப விசுவாச வாழ்வை ஆரம்பிக்க உங்களுக்குள்ளே தேவவசனம் செயற்பட வேண்டும். தேவ வசனத்தை வாசிப்பதினாலும், கேட்பதினாலும் நீங்கள் புதிய பிறப்பை அடைவீர்கள்.

இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொருவரின் ஆவியும் மரித்த நிலையிலேயே காணப்படுகிறது. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். எபே 2:1 அப்படியென்றால் உங்கள் ஆவி மரித்திருந்திருக்கிறது. மரித்திருந்த அந்த ஆவிக்கு தேவ வார்த்தையினால் உயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது. யோவான் 3:5 ஜலம் (தண்ணீர்) எபேசியர் 5:26 தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கு எனும்போது, தண்ணீர் தேவவசனத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

யோவான் 3:1 நிக்கொதேமு என்பவன் யூதர்களுக்குள்ளே மாபெரும் மனிதனாய், போதகனாய் இருந்தும் புதிய பிறப்பு இன்னதென்று அறியாதிருந்தான். தேவ இராஜ்யத்திற்கு செல்ல தகுதியற்றவனாயிருந்தான். ஆதலால், மதசார்புடன் வாழ்வது, வார்த்தையை நன்றாக கற்றிருப்பது, நீதிமானாய் வாழ்வது, சடங்காச்சாரங்களை அனுசரிப்பது எல்லாமே வீணானதாய் தோன்றுகிறது.

யாக்கோபு 1:18 - அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். அவரின் வார்த்தையானது எங்களுக்குள்ளே பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகிறதா?

### ஆவிக்குரிய முறையில் தேவனை தொழுதுகொள்ளும் தகுதியைப் பெற்றுத் தருகிறது. எபிரெயர் 4:12 யோவான் 4:23

தேவனுக்குகந்த ஆராதனையானது ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வதிலேயே சார்ந்துள்ளது. அப்படி தொழுதுகொள்கிறவர்களையே தேவன் தேடுகிறார் (மூல பாஷையில்) என்று யோவான் 4:23 குறிக்கப்பட்டுள்ளது. இன்று பார்க்கிற ஆராதனைகளானது அதிகமாக ஆத்துமாவினாலும் சரீரத்தினாலும் துதிக்கிறார்கள். ஒரே வார்த்தையை அநேகந்தரம் பிதற்றுவது, புத்தி பேதலித்தது போல் உடம்பை அங்கும் இங்கும் அசைப்பது, அழுவது, சிரிப்பது, கூச்சலிடுவது இவைகள் சரீரரீதியானது.

தேவனுடைய வார்த்தையானது உண்மையான ஆராதனைக்காக ஆவியையும், ஆத்துமாவையும் வெவ்வேறாக பிரிக்கிறது. வேறெந்த சக்தியாலும் அவைகளை பிரிக்க முடியாது. அவ்வாறு பிரியும் போது தான் எம்மால் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தேவனை தொழுதுகொள்ள முடியும்.

### ஆவிக்குரிய வளர்ச்சி உருவாகுகிறது 1 பேதுரு 2:3, சங்கீதம் 119: 103, மத்தேயு 4:4


புதிய பிறப்பைப் பெற்ற நீங்கள் விசுவாச குடும்பத்தின் குழந்தையாவீர்கள். குழந்தையாக இருக்கும் நீங்கள் வளர்ச்சியடைய வேண்டும். அவ்வளர்ச்சிக்கு தேவையான ஆகாரம் வேதவசனத்திலேயே கிடைக்கிறது. பொதுவாக குழந்தையொன்று பாலை விரும்பிக் குடிக்க எவ்வளவோ ஆவலாயிருக்கும். அதைப் போன்றே நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளை போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாய் இருங்கள். 1 பேதுரு 2:3

அப்படியான ஒரு ஆவல் உள்ளத்தில் இராவிட்டால் நாம் நோய்வாய்ப்பட்டிருக்கிறோம் என்பதே அதின் அர்த்தம்.

தேவ வசனத்தை நாம் தியானித்து வாசிப்பதினால் அவை எம் உள்ளத்தில் செயலாற்றுகிறது. அதனூடாக நாம் ஆவிக்குரிய வளர்ச்சியை பெறுவோம். ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வரும் நாங்கள் தொடர்ச்சியாக நித்தமும் தேவனுடைய சமூகத்திலிருந்து வரும் தேவ வார்த்தைகளைப் பெறுவோம்.

சங்கீதம் 119 : 103 - "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்."

- Sis. Anne Jayasundara -



# தண்ணீர் பிசாசு

- Sis. Grace Fernando -

இப்படியும் ஒரு பிசாசா? வியப்பாய் இருக்கிறதல்லவா! ஆம்! இப்பிசாசை நாம் சாதாரணமாக எடைபோட முடியாது. இன்று அநேக குடும்பங்கள் கெட்டு சீரழிந்து போவதற்கும், அநேக வாலிபர்களுடைய வாழ்க்கை நாசமாவதற்கும், பிள்ளைகளுடைய எதிர்காலம் இருள்மயமாவதற்கும் இந்த தண்ணீர் பிசாசுதான் காரணம்.

இந்த தண்ணீர் பிசாசு பற்பல பெயர்களில், பற்பல வர்ணங்களில், பல வடிவங்களில் வந்து மனிதனை ஆட்டிப்படைக்கிறது. அதன் பெயர்கள் வைன், ஜின், பியர், சாராயம், கசிப்பு, வொட்கா, ட்றம், விஸ்கி, கள்ளு.

இன்றைய சமுதாயம் இவற்றை பாவமாக கருதுவதேதில்லை. இவற்றின் பாவனை இல்லாதவர்களை சமுதாயம் தள்ளி வைக்கிறது. இவை மகிழ்விக்கிற ஒன்றாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் அநேகருக்கு நோய்க்கான மருந்தாகி விடுகிறது.

விசுவாசிகளென சொல்லிக்கொள்கிற ஒரு சிலரும் இந்தப் பாவனை உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். எந்தவித பயமுமில்லாமல் கர்த்தருடைய இராப்போஜனத்திலும் பங்கு கொள்கிறார்கள். இவர்கள் விசுவாசிகளா?

சபை போதகர்களும் கூட இப்பாவத்தைக் குறித்து பிரசங்கிப்பதில்லை. எனவே, வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினரும் இதை பாவப்பழக்கமாக கருதுவதில்லை.

இதைப்பற்றி தேவனுடைய வார்த்தையில் கூறுவது என்ன என்பதைப் பார்ப்போம்.

**நோவா (ஆதியாகமம் 9: 20 - 26)**

அவன் (நோவா) திராட்சை இரசத்தை குடித்து, வெறி கொண்டு தன் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான் (ஆதியாகமம் 9:21).

அக்காலத்தில் திராட்சைரசம் யாவரும் குடிக்கும் ஒரு பழரசமாகவே கருதப்பட்டது. ஆனால் நோவா வெறி கொள்ளும் அளவிற்கு குடித்தது தான் பாவம். இதனால் ஏற்பட்ட விளைவு என்ன? அவன் வெறிகொண்டிருந்ததால் தன் வஸ்திரம் விலகினதை கூட அவன் அறியவில்லை. இதன் முடிவு 25ம் வசனத்தில் நோவாவின் கடைசி மகன் கானான் தன் சொந்த தகப்பனாலேயே சபிக்கப்பட்டவனானான். தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கும் அடிமையானான். ஆதி 6:9ல் நீதிமானும், உத்தமனும் தேவனோடு சஞ்சரித்தவனுமாயிருந்த நோவாவின் இந்த வெறி அவனுடைய சொந்த குடும்பத்திலேயே பிரச்சினையை ஏற்படுத்திவிட்டது. தான் பெற்ற மகனையே சபிக்க வேண்டியதாகிவிட்டது. இந்த காமின் சந்ததியார் தான் எபூசியர், எமோரியர் (ஆதி 10:16) சோதோம், கொமோரா வரை காமின் சந்ததியார் பரவியிருந்தனர். இந்த ஜாதியார் துன்மார்க்கமாய் வாழ்ந்ததினால் தேவன் அவர்களை அழித்து விடுகிறார். (ஆதி 18:20, 19: 24,25) நோவாவின் இந்த வெறி எவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்தியது. ஆதலால், ஒரு மனிதனின் மதுவெறியானது யாருக்கும் ஒரு நன்மையையும் கொண்டு வராது.

**லோத் (ஆதி 19:33-38)**

ஆதி 11: 27ல் இவன் ஆபிரகாமின் சகோதரனாகிய ஆரானின் குமாரன். லோத்தின் இரண்டு மகள்மாரும், தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்து, தங்கள் சொந்த தகப்பனோடு முறை கேடான உறவை வைத்துக்-

கொண்டார்கள். மது போதையில் அவன் என்ன நடந்ததென்று உணராதிருந்தான். அதின் விளைவாக, தங்கள் சொந்த தகப்பனாலேயே அவ்விருவரும் கர்ப்பம் தரித்து இரு குமாரர்களை பெற்றார்கள். இவர்களின் சந்ததியே மோவாபியர் அம்மோனியர். இவ்விரு ஜாதிகளுமே தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு சத்துருக்களாகவே இருந்தார்கள். துன்மார்க்கமான இவ்விரு ஜாதிகளும் உருவாவதற்கு காரணம் லோத்தின் குடிவெறியே ஆகும்.

எனவே, ஒரு மனிதனின் குடிவெறியால் எந்தவொரு நன்மையான காரியமும் நடந்ததாக வேதத்தில் எங்குமே இல்லை. மதுபானம் ஒரு மனிதனுக்குள் போ-னவுடனேயே பயமும், வெட்க உணர்வும் வெளியே போய் விடுகிறது. ஒரு மனித-னின் இவ்வெறியினால் குடும்பத்திலுள்ள மனைவி, பிள்ளைகளின் மனநிலைப் பாதிப்படைகிறது என்பதையும் இந்த வெறியர்கள் உணர்வதே இல்லை.

ஏசாயா 5: 11 -12: சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக்கொண்டே இருக்கிறவர்களுக்கு ஐயோ! அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புறாவையும், மேளத்தையும், நாகசுரத்தையும், மதுபா-னத்தையும் வைத்து விருந்துகொண்டா-டுகிறார்கள். ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதுமில்லை. அவர் கரத்தின் செய்கையைச் சிந்திக்கிறதும் இல்லை.

மதுபானம் அருந்தும்போது வாத்திய கருவிகளை வாசித்துப் பாடல்களை பாடியும் அதை அருந்துகிறார்கள். எப்ப-டிப்பட்ட பாடல்களை பாடுகிறார்கள். மதுபானம் அருந்தும் போது ஒருவனால் கிறிஸ்தவ பாடல்களை பாட முடியுமா? முடியவே முடியாது. எனவே, மதுபானம் அருந்துகிறவனால் கர்த்தரின் கிரியைக-ளை நோக்கவும் முடியாது. கர்த்தரின் செயல்களை சிந்திக்கவும் முடியாது.

இன்று அநேகருக்கு ஒரு நாளைக்கு மதுபானம் அருந்தாவிட்டால், கைகள் நடுங்க ஆரம்பிக்கின்றன. எனவே அதி-காலமே எழுந்து மதுபானம் அதிக விலை என்பதால், வீடுகளில் காய்ச்சி மலிவு விலையிலுள்ள கசிப்பு என்கிற ஒருவித கலப்பு சாராயத்தை குடிக்கி-றார்கள். இதை காய்ச்சுவதற்காக பாவிக்-கப்படுகிற முக்கிய பொருட்கள் எவை தெரியுமா? யூரியா, அழுகின பழங்கள்.

இப்பானம் மனிதனுடைய சரீரத்தில் உள்ள அநேக உள் உறுப்புகளை செயல் இழக்கச் செய்து விடுகிறது. 1 கொரிந்தியர் 3: 16,17ன் படி எமது சரீரம் தேவனுடைய ஆலயம். தேவனுடைய ஆலயமாகிய சரீரத்தை ஒருவன் கெடுத்-தால் அவனைத் தேவன் கெடுப்பார். ஆதலால், தேவனுடைய பிள்ளையென்று சொல்கிற நீ இந்தப் பழக்கமுள்ளவனாக இருந்தால், உன்னுடைய நிலைமை எவ்வளவு பயங்கரமாயிருக்கும். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே! எபிரெயர் 10: 31

யாராவது தேவனுடைய சபைக்குள் (ஆலயத்திற்குள்) மதுபானத்தைக் கொ-ண்டு வருவார்களா? இல்லவே இல்லை. ஏனெனில், “இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நான் இருக்கிறேன் என்றார்” மத்தேயு 18:20. இதை விசுவாசிக்கிற நீ தேவன் வாசம் பண்ணுகிற உன்னுடைய சரீரத்தை இதனால் தீட்டுப்படுத்தலாமா? தீட்டுப்படுத்தத்தான் முடியுமா? இந்த மாய்மாலமான வாழ்க்கையை வாழத்தான் வேண்டுமா?

## மதுபானம் ஏற்படுத்தும் தீமைகள்: நீதிமொழிகள் 23: 29 - 35

“ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே.

மதுபானம் அருந்துவோருக்கு போதை தெளிந்த பின்பு தான் வேதனை, துக்கம். ஆனால், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்கு விசேஷமாக மனைவி, பிள்ளைகளுக்கோ அதற்கு முன்பதாகவே வேதனையும், துக்கமும் ஏற்படுகிறது. காரணம், ஒருவனுடைய இந்த மது போதையானது முழுக்குடும்பத்தையும் சமுதாயத்தையும் பாதிக்கிறது. இரவில் நிம்மதியாக தூங்க முடிவதில்லை. இதனால், மறுநாள் வேலைக்கு செல்லவோ, பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லவோ முடிவதில்லை. இது மட்டுமா? ஞாயிறு ஆராதனைக்கும், பிள்ளைகளின் ஓய்வுநாள் பாடசாலைக்கும் செல்ல முடிவதில்லை. ஒரு மனிதனின் இந்த மதுவெறியானது பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம், ஆவிக்குரிய வாழ்க்கை எல்லாவற்றையுமே பாதிக்கிறது.

மதுபானம் அருந்துபவர்கள் தங்களை காயப்படுத்துவது மாத்திரமல்ல, மற்றவர்களையும் காயப்படுத்துவார்கள். தூஷனமான வார்த்தைகள் வாயிலிருந்து புறப்பட்ட வண்ணம் இருக்கும். தங்களை தாங்களே கட்டுப்படுத்த முடியாத நிலைமை. எனவே மதுபான பழக்கமானது யாருக்கும் எந்த நன்மையும் கொண்டு வருவதில்லை.

கலாத்தியர் 5:21 - “வெறி கொள்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை” என இரண்டாவது தடவையாக மறுபடியும் சொல்லுகிறேன் என பவுல் கூறுகிறார். ஏனெனில் அதற்கு முன்பாக 1 கொரிந்தியர் 6:10 “வெறியர் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை” என்று கூறுகிறார்.

அன்பான சகோதரனே! சகோதரியே! நீ இப்பழக்கமுள்ளவனாக இருந்தால் இன்றே மனந்திரும்பு. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி எம்மை சுத்திகரிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

இதோ! இப்பொழுதே அனுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சணிய நாள்! 2 கொரிந்தியர் 6:2

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## ௨ சாமுவேல்

அதிகாரங்கள் : 24
வசனங்கள் : 695

### சிறப்பம்சங்கள்

- தாவீதின் வாழ்க்கையே மையம்

### அதிகாரப்பகுப்பு

- தாவீது அரசனாதல்
  2 சாமுவேல் 1-5
- தேவன் தாவீதின் ராஜ்ஜியத்தை உறுதிப்படுத்தல்
  2 சாமுவேல் 6-10
- தாவீத பத்சேபாளுடன் செய்த பாவம்
  2 சாமுவேல் 11-12
- தாவீதின் மகன் அப்சலோமின் செயற்பாடுகள்
  2 சாமுவேல் 13-18
- தாவீதின் யுத்தங்கள்
  2 சாமுவேல் 19-21
- தாவீதின் பாடலும் கடைசி வார்த்தைகளும்
  2 சாமுவேல் 22-23
- தாவீதின் பெருமையும் விளைவும்
  2 சாமுவேல் 24

# மூன்று தரமல்ல

- Sis. Devi Lavankumar -

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இந்த 2019 ஆம் ஆண்டிலே ஜீவஒளி எனும் சஞ்சிகையினூடாக உங்களோடு பேசக்கொடுத்த என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

நாம் வேதாகமத்திலே மூன்று எனும் இலக்கத்தின் அடிப்படையில் அமைந்தவற்றை அநேக இடங்களிலே பார்த்திருக்கிறோம். அறிந்திருக்கிறோம். அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

முதலாவதாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்று விதமான சோதனைகளுக்குள்ளானார். மத்தேயு 4:1-10,

இரண்டாவதாக, கெத்செமனே பூங்காவில் இயேசு மூன்று தரம் ஜெபித்தார். மத்தேயு 26:44

மூன்றாவதாக, பேதுரு மூன்று தரம் மறுதலித்தார். லூக்கா 22:54-62

நான்காவதாக, இயேசு மூன்றாம் மணிவேளையில், சிலுவையில் அறையப்பட்டார். மாற்கு 15: 25

ஐந்தாவதாக, இயேசு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். லூக்கா 24: 7

வேதத்தில் தானியேல் எனும் தேவ மனிதனையும், அவனின் நண்பர்களையும் காண்கிறோம். அவர்கள் மூன்று பிரதான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். இவை தானியேலின் புத்தகம் முதலாம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

முதலாவதாக பெயர்கள் மாற்றப்படுகின்றன. பின்பு பிற மொழி பேச கற்பிக்கப்படுகிறார்கள். மூன்றாவதாக, உணவு மாற்றப்படுகிறது. முதல் இரு விடயங்களிலும் அவர்கள் பொறுமையோடு செயல்பட்டனர். ஆனால், மூன்றாவதாக உணவு விடயம் தொடர்பாக அவர்களால் பொறுமையோடு இருக்க முடியவில்லை. அது ஏன்? பெயர்களை மாற்றியது, தானியேல் அல்ல. கல்தேயர் தான் மாற்றினர். பெயர்களை மாற்றினால் தானியேல் எனும் பெயரும் அவனது நண்பர்களின் பெயர்களும் மங்கிப்போவதில்லை. ஏனைய பாஷைகளை கற்க நேரிட்ட போதும் அது அவர்களது வாழ்க்கை நெறியியலை சேதப்படுத்த முடியாது. மேலும், அது புத்தி சம்பந்தமான விடயமாகும். ஆனால் “உணவு விடயம்” எனும் வரும்போது யூதர்களுக்கு தேவனோடுள்ள தொடர்புடனும், அவர்களின் பக்தி வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் காரணமாகவும், சுயமாய் தெரிந்தெடுப்புக்கான ஒன்றாயும் காணப்பட்டது. அவர்கள் தங்கள் வாழ்வில் தேவனின் கட்டளைக்கு முதன்மை தந்து கீழ்ப்படிந்து, அர்ப்பணிப்புடன் வாழ்ந்தவர்களானதால் இந்த மூன்றாம் சோதனையானதும், அவர்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

இவையெல்லாவற்றிலேயும் தேவன் அவர்களோடு கூட இருந்து ஜெயத்தை அருளினார். தானி 1:15 பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது.

பேதுருவுக்கும் மூன்றாம் முறை சேவல் கூவினபோதே அவனின் புத்தி தெளிந்து மனந்திரும்பினான். அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவு கூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான். லூக்கா 22: 61, 62

ஆம், பேதுரு சரியான காரியத்தையே செய்தான். அதுவே பிற்பாடு அவனுடைய வாழ்வு மற்றும் ஊழியத்தின் வெற்றிக்கு அடித்தளமாய் அமைந்தது. ஆம், நம் வாழ்விலும் சோதனைகள் மெது மெதுவாக தாக்கும். அது பிசாசின் வஞ்சகம், முதன்முறை கவனமாகத்தான் இருப்போம். இரண்டாந்தரம் அதற்கு விட்டுக்கொடுத்து விடுவோம். மூன்றாம் முறை சோதனைக்கு உடன்பட்டுவிடுவோம். ஆதலால், ஆரம்பத்திலேயே கவனமாய் இருப்போம். இல்லை எனில், கடைசியில் நாம் அறியாமலேயே அதில் அமிழ்ந்தே போய்விடுவோம்.

நமது ஆண்டவராகிய இயேசு முதலாவது சோதனையிலேயே பிசாசை முறியடித்தார். ஆதலால், ஆரம்ப சோதனையிலேயே உஷாராக இருக்க வேண்டியது மிக அவசியம். மூன்று தரமல்ல முப்பது தரம் சோதனை வந்தாலும் நாம் பின் வாங்கக்கூடாது. அதற்கு நாம் தேவனுடன் நற்தொடர்பில் இருக்க வேண்டும். அவரே நமக்கு இறுதியில் ஜெயத்தைக் கொடுப்பார்.

ஜெயமோ! கர்த்தரால் வருகிறது. நீதிமொழிகள் 21:31. ஆமென்! கர்த்தர் உங்களை எப்பேர்ப்பெற்ற சோதனைகளிலும் காத்து ஆசீர்வதிப்பாராக!

**சுதந்திரம்** (4ம் பக்க தொடர்ச்சி)

2. ஒருவன் போர்வையை விட்டு விட்டு தலைத்தெறிக்க ஓடினான்.

3. யூதாஸ் எனும் சீஷன் வெள்ளிக்காசுக்கு அவரைக்காட்டிக் கொடுத்தான்.

ஆதலால், சாதாரண நிலைமையில் சீஷனாய் நிற்பது, ஓரளவு இலகுவானது. ஆனால், உபத்திரவ உஷ்னம் அதிகரிக்கலாம். நாமும் இதே வண்ணமாக திங்கள் தொடங்கி சனிக்கிழமை வரை நாம் எவ்வாறு உலகத்தோடு வாழ்கிறோம்.

“கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார் 1 கொரிந்தியர் 15:3,4 இதுதான் சத்தியம். இவ்வாக்கியத்தை விசுவாசிக்க அறிந்திருப்போமேயானால், தேவனை எம்மால் தொழுது கொள்ள முடியும். இதுவே விடுதலை பெற்றவர்களுக்குரிய அடையாளமாகும். ஆதலால், நாம் தேவனை தொழுது கொள்ள தடையாயிருப்பது என்ன?

“பாவஞ்செய்கிறன் எவனும் பாவத்துக்கு அடிமையாய் இருக்கிறான்” விடுதலைக்கு பரஸ்பர விரோதமான வார்த்தையாகும். ஆதலால், தொடர்ந்தும் பாவத்தில் வாழ்கிறீர்களா? அப்படியானால் தேவனை தொழுது கொள்ள உங்களால் முடியாது.

சுதந்திரம் என்பதன் கருத்து விடுதலையை அனுபவிப்பதாகும். இன்னும் பாவத்திற்கு அடிமையாயின் எம்மால் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது.

“குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.”
(யோவான் 8:36)

# சாத்தானின் அக்கினி அஸ்திரங்கள்

- Bro. Dinesh M. Paul -

வேதத்ததிலுள்ள இந்த பகுதியை நாம் வாசிக்கும் போது, தங்களுடைய பாவங்களுக்காக மன்னிப்பை பெற்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக தங்களுடைய உள்ளத்தில் ஏற்றுகொண்ட ஒவ்வருவரும் தங்களது வாழ்க்கையில் முகங்கொடுக்க வேண்டிய ஒரு போராட்டத்தை குறித்து காணலாம்.

இந்த போராட்டமானது எம் ஒவ்வொருவருக்கும் இடையிலான போராட்டம் அல்ல மாறாக பிசாசுக்கு எதிரான போராட்டமாகும். இப்போராட்டத்திற்கு முகங்கொடுப்பதற்கான செயற்றிட்டத்தினையும், அதற்கான கோட்பாடுகளையும் பவுல் குறிபபிடுகிறார்.

16ம் வசனத்தில் சாத்தானுடைய தாக்குதல் குறித்து கூறுகையில் அவன் அக்கினி அஸ்திரங்களை எய்வதாக பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே சாத்தான் எமக்கு எதிராக எய்யும் சில அக்கினி அஸ்திரங்கள் குறித்து கவனிப்போம்.

இந்த அக்கினி அஸ்திரங்களின் குறியிலிருந்து தப்புவதற்காக நாம் விசுவாசம் என்னும் கேடயத்தை பிடித்து கொள்ள வேண்டும் என பவுல் கூறுகிறார்.

கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள அசைக்க முடியாத விசுவாசத்தினால் மாத்திரமே இந்த அக்கினியாஸ்திரங்களை அவித்து போட முடியும்.

**1. சந்தேகம் (ஆதியாகமம் 3:10)**

தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக பிசாசானவன் எய்யும் முதலாவது அக்கினியாஸ்திரம் சந்தேகமே ஆகும்.

ஏதேன் தோட்டத்திலே ஏவாளை வஞ்சிப்பதற்கு முன்பதாக அவன் முதலில் ஏவாளுடைய உள்ளத்திலே சந்தேகத்தையே ஏற்படுத்தினான்.

தேவன் கூறிய வார்த்தையின் மேலே ஏவாளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தினான்.

“தேவன் சொன்னதுண்டோ?” என ஆதியாகமம் 3:1ல் சர்ப்பம் வினவியது.

இன்று சாத்தான் இதே சந்தேகம் எனும் அம்பை அனேகருடைய வாழ்க்கை அழிவதற்கு ஏதுவாக பயன்படுத்துகின்றான். இந்த சந்தேகமானது எங்களை மாத்திரம் அல்லாது எமது குடும்பம், சபை, சமுதாயம் அனைத்தையுமே பாதிக்கின்றது. அத்தோடு இது எம்மொவ்வருவருக்கும் இடையிலான ஐக்கியத்தையும் பாதிக்கின்றது.

அநேக குடும்ப உறவுகள் இந்த சந்தேகத்தினால் பாதிக்கப்படுகின்றன, கணவன் மனைவிக்கு இடையிலான சந்தேகம், பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான சந்தேகம், சகோதரர்களுக்கிடையிலான சந்தேகம். எந்தவிதமான சந்தேகமும் உறவுகளை பாதிக்கின்ற விதமாகவே அமைகின்றன.

நாம் சந்தேகிப்பதினால் ஏற்படும் மூன்று விடயங்களை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

- முன்னேற்றமின்மை (மத்தேயு 14:31)

இங்கு இந்த கதையிலே நடுக்கடலில் படகில் இருக்கிறதான சீஷர்களை நோக்கி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து கடலின் மேல் நடந்து வருவதைப் போல நடப்பதற்கு பேதுருவும் ஆசைப்படுகிறான்.

இயேசுக்கிறிஸ்துவின் அழைப்பின் பெயரில் பேதுரு தைரியமாக அடியெடுத்து கடலின் மேல் நடக்க தொடங்குகிறான். அடுத்த நிமிடமே இயேசுக்கிறிஸ்துவை பாராமல் தன்னை சுற்றியிருக்கிறதான காரியங்களை பார்த்து கடலிலே மூழ்கத்-

தொடங்கினான். ஏன் அவிசுவாசித்தாய் என்று கேட்டு இயேசு அவனை கடிந்து கொண்டார். (வச 31)

இங்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமானது நாம் சந்தேகிக்கத் தொடங்கும் போது எமது வாழ்க்கையில் எவ்விதமான முன்னேற்றமும் இருக்காது.

சந்தேகம் எம்முடைய வாழ்வில் நுழையும் போது எமது ஆவிக்குரிய வாழ்விலோ குடும்ப வாழ்விலோ சமூக வாழ்விலோ எந்தவொரு முன்னேற்றமும் இருக்காது. நாம் முன்னேறுவதை சாத்தான் ஒருபோதும் விரும்ப மாட்டான். அவன் சந்தேகத்தை எங்களுடைய உள்ளங்களில் விதைத்து தோல்வியையே உண்டாக்குகிறான்.

- வல்லமையின்மை (மத் 21:21)

இந்த சம்பவத்தின் ஊடாக நாம் சந்தேகிப்பதினால் எமது வாழ்க்கையில் பெரிய காரியங்களை செய்வதற்கான வல்லமையை இழந்து போகிறோம். நாம் சந்தேகிக்காத விடத்து மலைகளை கூட பெயர்க்கக் கூடியதான பெரிய வல்லமையைப் பெறுகின்றோம்.

இன்று நாம் சந்தேகிப்பதினால் எமது வாழ்க்கையில் பல காரியங்களை செய்ய வல்லமையற்றவர்களாகவும் தேவனுடைய வல்லமையை எம் வாழ்க்கையில் அனுபவிக்க முடியா-தவர்களுமாய் இருக்கின்றோம்.

“அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.”
மத்தேயு 13:58

பிரியமான சகோதர சகோதரிகளே சந்தேகத்தை எங்களுடைய வாழ்க்கை-யிலிருந்து அகற்றி எமக்கு கொடுக்கப்-பட்ட வல்லமையை செயற்படுத்துவ-தோடு தேவனுடைய வல்லமையை எங்களுடைய வாழக்கையில் அனுபவிப்-போம்.

சந்தேகம் எங்கிருக்கிறதோ அங்கே தேவனுடைய வல்லமை இருக்க முடியாது.

- பலனின்மை (எபிரேயர் 4:2)

இங்கு இஸ்ரவேலர் அவர்கள் கேட்ட தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்-காததால் அது அவர்களுக்கு சிறிதேனும் பலனளிக்கவில்லை. இது எமக்கும் கூட ஒரு எச்சரிக்கையாக அமைகின்றது.

நாம் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கும் போது எம்முடைய வாழ்க்கையில் அந்த வார்த்தைக்கான எந்தவொரு தாக்கமும் இருக்காது. அது எமது வாழ்க்கையை பயனற்றதாகவும் பலனற்றதாகவும் மாற்றி விடும்.

இன்று நாம் எமது வாழ்க்கையைப் பார்க்கும் போது எமது வாழ்க்கையிலும் கூட நாம் கேட்ட வார்த்தைகளுக்கான பலன் அற்றதாகவே காணப்படுகின்றது. இதற்கான காரணம் சந்தேகமே ஆகும்.

எங்களுடைய வாழ்க்கையிலும் தேவனுடைய வார்த்தையின் மேலுள்ள சிறிய விசுவாசத்தை செயற்படுத்துவதன் மூலமாக எமக்கு கிடைக்கும் மகத்தான மாற்றங்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிப்போமாக.

பிரியமான சகோதர, சகோதரிகளே! பிசாசினால் எய்யப்படும் முதவாவது அக்கினியாஸ்திரத்தைப் பார்த்தோம். அது எவ்வளவு பயங்கரமானது எனவும் பார்த்தோம். ஆகவே எமது வாழ்க்கையை பிடித்துக் கொள்வதற்கும் அதை அழிப்பதற்கும் சந்தேகத்திற்கு இடம் கொடாமல் இருப்போமாக. மாறாக தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள விசுவாசத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதத்தை அனுபவிப்-போமாக. விசுவாசமெனும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாக நல்ல போராட்டத்தை போராடி பிசாசானவனின் அக்கினியாஸ்திரங்களை எல்லாம் இன்றே அவித்துப்போடுவோம்.

# பதரு பதறு

- Bro. Varaprasath -

“தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார் பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்“ என யோவான் ஸ்நானகன் எதிர்காலத்தில் ஓர் நாளைக் குறித்து சொல்கின்றார்.

எதிர்காலத்தைப்பற்றிக் கவலைக்கொள்ளாது, இன்றைய நாளில் உண்டு களித்து நன்கு அனுபவித்தால் போதும் என வாழ்வோர் சிலர். அன்றாட நாளின் தேவைக்காக அல்லும் பகலும் ஓய்வில்லாமல் இயந்திரம் போல் ஓடிக்கொண்டு இருப்போர் சிலர். சுற்றும் உலகை வெல்லும் எண்ணத்தோடு பறந்து கொண்டிருப்போர் சிலர். இவ்வாறு, இன்றைய மனிதன், தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்துகொள்வதற்காக, தன்னிலை மறந்து ஓடிக்கொண்டிருக்கும் பொழுது தன்னிலும் வேகமாய் தான் கொண்ட நேரம் ஓடுவதை கவனிக்கும் போது அவன் இவ்வுலகை விட்டு விடை பெறும் வேளை வந்து விடுகிறது. வேதாகமம் இதை மிக எளிமையாக, அவனவன் தன்தன் வழியிலே போனோம் என்கிறது (ஏசாயா 53:6).

பிறப்பும் இறப்பும் நமக்கு சாதாரணமாகிவிட்டன. ஆம், பிறப்பும் இறப்பும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது தான். நமக்கு பழக்கப்பட்ட ஒன்று தான். ஆனால் அவை, அதையுந்தாண்டி நமக்குணர்த்தும் யதார்த்தம் ஒன்று உள்ளது.

பிறப்பதற்கு முன் நாம் எங்கிருந்தோம்? இறந்த பின் நாம் செல்வது எங்கே?

நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன் என எரேமியா 1:5ல் தேவன் சொல்லும் போது அது நமக்கு இரு விடயங்களை ஊர்ஜிதப்படுத்துகிறது. ஒன்று, நாம் உருவாக்கப்பட்டவர்கள். அதாவது, நாம் உருவாக்கப்படுவதற்கு முன் ஒருபோதும் நாம் இருக்கவில்லை.. இரண்டு, நாம் தானாய் உருவாகவில்லை. தேவனே நம்மை உருவாக்கினார். ஒன்றும் இல்லாமல் இருக்கும் போதும் யாதுமொன்றை உருவாக்கக்கூடியவர் தேவன் ஒருவரே.

நம்முடைய ஆரம்பம் இப்படியாய் இருக்கிறது. இதையே நாம் பிறப்பு என்கிறோம். நாம் ஒருபோதும் இல்லாதவர்களாய் இருந்து உருவாக்கப்பட்டவர்கள் என்பது உண்மையாயினும் இனி நாம் ஒரு போதும் இல்லாமல் போக போவதில்லை. மனிதனை தேவன் படைத்த நாளிலே, அவனது நாசியிலே தேவன் ஜீவசுவாசத்தை ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் என ஆதியாகமம் 2:7ல் எழுதப்பட்டுள்ளது. “ஜீவ ஆத்துமா“ என்பதால் மனிதன் இனி இல்லாமல் போவதில்லை.

### மனிதன் என்பவன் யார்?

“நான்” என்பது உடலா? உயிரா? செயலா? மனிதன் என்பவன் ஜீவ ஆத்துமாவாயிருக்கிறான். அவனுக்கு ஓர் உருவம் கொடுப்பதற்காகவும் இவ்வுலகின் பௌதீக நியதிகளுக்குக் கட்டுப்பட்டிருப்பதற்காகவும் அவனுக்கு ஓர் உடல் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தேவனோடு தொடர்புகொள்வதற்காக அவனுக்கு ஓர் ஆவியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், தேவன் ஆவியாயிருக்கிறார். “மனுஷனிலுள்ள ஆவியே அன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.” என வேதாகமம் 1 கொரிந்தியர் 2:11ல் கூறுகிறது.

ஆகவே மனிதன் என்பவன், உடல் ஆத்துமா, ஆவி எனும் இவை மூன்றையும் கொண்டவன். எனினும், மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனதின் காரணமாக, பாவத்தின் சம்பளம் மரணம் எனும் நியதியின் படி, மனிதனின் ஆவி இறந்து போனது. ஆகவே மனிதனால் இன்று தேவனோடு தொடர்புகொள்ள முடிவதில்லை.

மனிதனின் ஆவி இறந்த நிலையில் இருந்தாலும், அவனது உடலும் ஆத்துமாவும் உயிருடன் இருப்பதால் தான் மனிதன் தன் சுய எண்ணம்படி தேவனைக் கருத்தில் கொள்ளாமல் வாழ்கிறான்.

நமது சிந்தனை, பேச்சு, செயல், உணர்வு இவை யாவும் நம்முடைய ஆத்துமாவின் செயற்பாடுகளாகும். நம் ஆவி இறந்திருந்தாலும், தேவன் நம் ஆத்துமாவில் மனச்சாட்சி எனும் ஓர் உணரியை வைத்திருக்கின்றார். அதுவே, நாம் இழந்து போன, தேவனுடனான தொடர்பை தேடி மீண்டும் நிலைநாட்டுகின்ற முயற்சியில், நம்மை மீறிய சக்தி ஒன்று உள்ளது என தேவனைப்பற்றிய தேடலை நமக்குள் ஏற்படுத்துகிறது.

ஒருபோதும் இல்லாமல் இருந்து, தேவனால் இவ்வண்ணம் உருவாக்கப்பட்ட மனிதன் பாவஞ்செய்ததின் விளைவாக மரணம் அவன் மேல் ஆக்கினையாக வர, முதலில் அவனது ஆவி அவனுக்குள் இறந்து விட்டது. எனினும், தேவன் இரக்கமுள்ளவர் என்பதால், உடனேயே மனிதனை முற்றிலுமாக அழித்து விடாமல், அவன் இந்த உடலுடன் சிறு காலம் வாழ அனுமதித்திருக்கின்றார். இப்படியாக, மனிதன் இந்த உடல் எனும் கூட்டிற்குள் வாழும் நாட்களில் தன் ஆவியை உயிரடையச்செய்துகொள்வதற்கான வாய்ப்பையும் தேவன் அளித்துள்ளார்.

ஆம், மரணம் என நாம் பொதுவாக எதைக் கூறுகிறோம் தெரியுமா? நம் ஆத்துமா இந்த உடலை விட்டு பிரந்து செல்வதைத்தான். ஆனால், தேவனுடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும். தேவன் நமக்கு இன்னுமோர் வாய்ப்பைக்கொடுத்திருக்கிறார். அது தான் நாம் இந்த உடலுக்குள் இருக்கும் நாட்களுள் ஏதாவது ஓர் நாளில், நம்முடைய மெய்நிலை அறிந்து, நம் பாவங்களுக்கான பரிகாரத்தை செய்து அதை நிவிர்த்தியாக்கிக்கொள்ளலாம்.

ஆனால், நம்முடைய பாவங்களை நிவிர்த்தியாக்கிக்கொள்வதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உள்ளது. நம்முடைய பாவங்களுக்கு உரிய சம்பளமாகிய மரணத்தை, ஒரு பாவமும் செய்யாத ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் மேல் கொண்ட தம் அன்பின் காரணமாக தன் மேல் ஏற்றுக்கொண்டதால், நம்முடைய பாவங்களுக்கான பரிகாரம் இப்பொழுது செய்து முடிக்கப்பட்டாயிற்று. இனி நாம் செய்வதற்கு ஒன்றைத்தவிர வேறேதும் இல்லை. ஆம், “ஆண்டவரே! நான் பாவம் செய்திருக்கிறேன். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்.” என நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து கொண்டே, கண்களை மூடி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் சொல்வதைத் தவிர நீங்கள் செய்ய வேண்டியது வேறெதுவும் அல்ல.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார். (1 யோவான் 1:9)

“நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை. எல்லாரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.” என்பதே தேவன் மனிதனைப்பற்றிக் கூறும் மனிதனுடைய உண்மையான நிலவரமாகும். (ரோமர் 3:10-12)

இக்கட்டுரையில், இதுவரை சொல்லப்பட்டதற்கும் இக்கட்டுரையின் தலைப்பிற்கும் என்ன தொடர்பு?

தானியத்தின் பதர் என்பது, உள்ளே, தானிய மணியைக்கொண்டிராத வெற்றுத் தோல் ஆகும். இன்றைய மனிதனும் இவ்விதமாகவே இருக்கின்றான். பாவத்தின் காரணமாக, தேவனோடு தொடர்பு கொள்ள முடியாதபடி, இறந்த ஆவியுடன் வாழும் மனிதர்கள் யாவருமே வெற்றுப்பதர்களே. பார்வைக்கு தானியம் போல் தோற்றமளித்தாலும் பதர் என்பது வெற்றுத்தோல் மாத்திரமே. அது போல தான், ஆவியில்லாத மனிதன்.

இந்த உடல் எனும் கூட்டுக்குள் மனிதனின் ஆத்துமா இருக்கப்போகும் காலமோ வெகு சொற்பம். ஆனால், இந்த காலத்துக்குள் தன் ஆவியை அவனால் உயிர்ப்பித்துக்கொள்ள முடியுமென்றால், ஆத்துமா இவ்வுடலை விட்டுப்பிரிந்து சென்றாலும் அக்கினி எரியும் நரகத்தின் தண்டனையை அனுபவிக்காமல், தேவன் இருக்கும் இடத்தில் தேவனோடிருக்கலாம்.

நம் ஆவியை உயிரடையச்செய்யக்கூடியவர் தேவன் மாத்திரமே. நம் பாவங்களை நாம் அறிக்கையிட்டு ஆண்டவரிடம் மன்னிப்பை கேட்கும் போது தேவன் நம்மை மன்னிக்கின்றார். காரணம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்த படியினால்.

அதே போல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து இப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் நாம் அவரிடம் மன்னிப்பு கேட்டும் அக்கணமே அவர் நமக்குள் வந்து நம் ஆவியை உயிரடையச்செய்கிறார். இவ்வாறு, அவரால் நம் ஆவி உயிரடைந்து விடுமாயின் இனி நாம் பதர் அல்ல, தானியமாயிருப்போம்.

தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார் பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். ஆகவே, நீ இன்னமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்பு கேளாத பதர் என்றால், இது நீ பதற வேண்டிய நேரமாகும். இந்த உடலுக்குள் உன் ஆத்துமா இருக்கும் வரையிலும் தான் உனக்கு இந்த சலுகை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உனக்கு இலவசமாய்க் கொடுக்கும் இந்த பாவ மன்னிப்பை நீ ஏற்றுக்கொள்ளாமலேயே உன் உடலை விட்டு நீ பிரிந்து போய் விட்டால், பதர் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவது போல நீயும் நரகத்தில் தள்ளப்பட நேரிடும்.

ஆகவே, ஆண்டவரிடம் வா!
கிறிஸ்து உனக்காக மரித்தாரே!

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**


**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................



Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 0112581901
www.christianfellowshipcentre.com

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.